379

KADARKALI VENBA.

காதற்கலி வெண்பா.

25 OCT 1921
MADRAS

ம. தி. திருமறைக்குன்றம்
இயற்றியது.

(Q26:41)
N21
175434

1921.

...ved.] [Price As. 4.

முகவுரை.

25 OCT 1921

நிகரற்ற புகழுடைய உத்தம நாடகக்கவியாகிய ஷேக்ஸ்பியர் எழுதியுள்ள நாடகங்களுள் மிகச் சிறந்தது "ஹாம்லெட்" என்பதே. கதாநாயகனாகிய ஹாம்லெட் என்பவன் ஒபீலியா என்னும் ஓர் பிரபுமகளை நேசித்துவந்தான். ஒபீலியாவின் தந்தை இவ்விஷயத்தை அறிந்து தன் மகளைத்திட்டப்படுத்தி ஹாம்லெட் என்பவனைப் பாராதிருக்கச் செய்தான்.

ஹாம்லெட் வெகுநாளாக ஒபீலியாவைத் தன் உயிரினுருவாக மதித்து அவள்பாலே சிந்தையு நினைவுஞ் செலுத்தித் திடீரென மறக்க முடியாதவனாயினன். தன் காதலியின் நினைவே அவனை மிக வருத்தியது. துயரமுற்றவர் தங்குறைகளைப் பிறர்பாற் சொல்லியே தீர்த்துக்கொள்வது வழக்கம். ஆதலால், ஹாம்லெட் தனது குறைகளையும் தன்காதலி தன்முன் னிருப்பதாகவே பாவித்து முறையிடுகிறான். இதனைத் தமிழ் நடைக்கு ஏற்பச் சற்று மாற்றி எழுதியிருக்கிறது. ஒபீலியா என்பதே நீலாவென மாறிற்று.

இத்தகைய காதற்கவிகள் ஆங்கிலத்தில் பல உண்டு. ஜானதன் ஸ்விப்ட் என்பவர் ஸ்டெல்லா என்பவளைக்குறித்து "ஜர்னல் டு ஸ்டெல்லா" என்று ஓர் நூல் எழுதி இருக்கின்றனர். இடாலி தேசத்து டேண்டி என்பரும் பியாட்ரிஸ் என்பவளைப் புகழ்ந்து "ப்யூடி ஆப் ஹோலினஸ்" என்னும் காதற் கவியொன்று எழுதியதும் ஆங்கிலம் படித்தவர் அறிவர். நீலா வென்பது நூலாசிரியன் மனத்துதித்த ஓர் மனோ உருவேயன்றி உயிருடன் உலவும் ஒருவரையுங் குறிப்பதில்லை.

ம. தி. திருமறைக்குன்றம்.

894.8111
235-6

To

My Soul's Idol

The Most Beautiful

Neela.

125839

A FOREWORD.

25 OCT 1921

The author thinks a few words from me will fitly introduce his little poem to the notice of the discerning public. Without attempting to say much by way of a detailed criticism of the work itself, and without seeking to say much even about the author, who is young yet and has all the world before him, I think I may usefully offer a few remarks by way of warning and of guidance.

The poem is a phantasy made of the finest part of pure love; it blossoms forth from a fine frenzy; we may call it nympholepsy; to construe it in any literal manner would be to stumble into a bathetic error, into what Prof. Saintsbury calls, 'the prosaic heresy.' Most young men in the romantic freshness of youth have an ideal of love and beauty, and it is to such an ideal that the following verses have been addressed. There is no lack of sincerity and each line of the poem written with the heart's red blood, throbs with the pulse of a pained and panting heart. The experience is there; the sincerity is there; only the object of the love is *in nubibus*.

I will not stop to inquire whether an Indian has much chance of feeling love and of inditing love verses; in my view of the work as a nympholepsy, such a question does not arise; but it may be interesting to

consider how far such an innovation in Tamil literature —for doubtless it is one—will find a following or meet with general approval. We cannot say definitely, but can only wish success to this experiment.

The poem is pretty long and even diffuse, but the blossoming of an ardent and youthful imagination cannot but be in abundance and profusion. The comparison of the face to the moon and the lotus, and the rejection of the comparison on the ground that it never waxes nor wanes and is never-fading, have the merit of startling freshness and originality. The concluding lines that ask how much more inspiring actual possession might be, than mere longing, raise the large question whether success in love or failure be the greater incentive to high and noble poetry.

The topic is very seductive, but I must not forget I am writing only a foreword. I have now only to wish all success to the poem and all fame and joy and happiness to the young author.

MADRAS, 12—9—21.

T. B. KRISHNASWAMI, M.A., B.L.
Professor of English
Pachaiappa's College, Madras.

காதற் கலிவெண்பா.

1. உத்தமியே! காதலியே! உயர்குலத்து நீலாவே!
சித்தமதிற் குடிகொண்ட செல்வத்தின் தேவதையே!

2. பனிக்கடலை யுண்டிட்ட பாண்டத்தின் முனிபோலென்
மனக்கடலை யுண்டிட்ட மாண்புடைய நீலாவே!

3. கருணைக்கடலே! காதலியே! நீலாவே!
கருணையைத் தந்தெனக்குக் கைவல்யங் காட்டாயோ?

4. காமக்கடலே! காதலியே! நீலாவே!
காமத்தான் மெய்வருந்துங் காதலனைக் காவாயோ?

5. இன்பக்கடலே! இனிப்புடைய நீலாவே!
துன்பந் துடைத்தென்னைத் தூங்கவே செய்யாயோ?

6. வானின்மதியே! வனப்புடைய நீலாவே!
தேனினமுதே! தித்திக்கு நீலாவே!

7. இச்சைக் கடலே! நானிச்சிக்கு நீலாவே!
உச்சியுலாவு மூர்வசியும போல்வாயே!

8. அன்னநடையே! ஆனந்தமெய்யுருவே!
என்னைமறவாத வேந்திழையே! நீலாவே!

9. மதியின்முகமே! மாண்புடைய நீலாவே!
நிதியினணங்கே! நின்காதலனை யெண்ணுயோ?

10. கன்னலுருவே! கற்கண்டின் தீம்பாகே!
என்னைமறவாம விருந்தாயே, நீலாவே!

11. களங்கமில்லாமற் கற்பகம்போல் நீலாவே!
பளிங்குமுகத்துடனே பாராயோ சற்றென்னை?

12. அன்பினுருவே! ஆனந்த போதினியே!
துன்பந் துடைக்குந் தூமணியே! நீலாவே!

13. கருணையுருவே! காதலியே! நீலாவே!
கருணையாலென் றுயரம் காணாதுசெய்யாயோ?

14. தேன்னின்மொழியே! தேவதையே! நீலாவே!
காணின்மலரே! கவினுடைய நீலாவே!

15. வல்லிக்கொடியே! வனப்புடைய நீலாவே!
மல்லிகைமலரே! மணங்கமழும் நீலாவே!

16. மயிலைப்போல் நீயுலவும் மாடியையான் கண்ணுற்று
மயிலையான்காணாது மனங்கலங்கி வாடுவனே!

17. தினகரனைக்காணாத திரிலோக வுயிர்போலென்
மனவுருவைக்காணாது மனங்கலங்கி வாடுவனே!

18. வனப்பென்று நானிருந்த வனிதையரை நோக்கிடலும்
வனப்பற்ற பேய்போலும் விளங்குவது அறியாயோ?

19. முழுமனத்தோடுந்தனையான் முக்காலுந்தியானித்துப்
புழுங்கிமனங் காதலினாற் புலம்புவதும்பொய்யாமோ ?

20. உலகத்தில் யான்விரும்பு முறுபொருளொன் றுண்டாயின்
குலமுற்ற நீயன்றோ? காதலியே! நீலாவே!

21. சகமதனில் யான்விரும்புஞ் சிறந்தபொரு ளுண்டாயின்
முகமதனா லெனைவளாககு மதுமொழியே நீயன்றோ?

22. தரணிதனில் யான்விரும்புந் தூயபொருளுண்டாயிற்
கருணையமர் நீலாக காதலியே! நீயன்றோ?

23. குமுதமலரொத்தவுந்தன் கொவ்வையங் கனியதனாற்
சிமிழ்ப்புண்ட காதலனைச் சற்றேனுமெண்ணாயோ?

24. ஆசைக்கடலே! என்னானந்தவெள்ளமே!
பூசிக்க நான்தக்க பேரின்ப நீலாவே!

25. கண்ணென்னு மோர்பொறிக்குக் கவினுடையதுண்டானால்
பெண்ணரசே! நீயன்றோ? பைந்தொடியே! நீலாவே!

26. காதென்னு மோர்பொறிக்குக் களிப்புடையதுண்டானால்
தீதற்றநின்வாயின் றேன்மொழியென் றறியாயோ?

27. மூக்கென்னு மோர்பொறிக்கு மணமுடையதுண்டானால்
ஆக்கமென்னழகுடைய ஆருயிரே நீயன்றோ?

28. வாயென்னு மோர்பொறிக்கு வாட்டமுளதுண்டானால்
சாயல்பெருகாதலீ! உன் செவ்வாயினமுதன்றோ?

29. மெய்யென்னுமோர்பொறிக்கு மெய்ப்பொருளொன்றுண்டாயின்
பொய்யில்லாவன்புடைய பைங்கிளியே! நீயன்றோ?

30. ஐம்பொறிக்கு மோர்பொருளே யானந்தருமானால்
கொம்பொக்குங் கொடியிடைக் காதலியே! நீயன்றோ?

31. மெய்யன்போ டுந்தனையான் மறவாது துதித்துவர
மெய்யன்பிலாதவள்போல் மறந்திருப்ப தழகாமோ?

32. ஒருக்கணமு முனைநினைந் துருகாமலில்லாத
வரிக்கண்ணால் வென்ற எந்தன் வாண்மனத்தைக் காவாயோ?

33. மாறாத மனத்துயர மாற்றவல்லா ருளராயின்
பாராத வனப்புடைய பெண்மணியே! நீயன்றோ?

34. தீராத மனத்துயரந் தீர்க்கவல்லா ருளராயின்
மாறுதவனப்புடைய மாதரசே! நீயன்றோ?

35. நீங்காத மனத்துயர நீக்கவல்லா ருளராயின்
தூங்காமல் நினைத்தாற்றுந் தூமணியே! நீயன்றோ?

36. குறையாத மனத்துயரங் குறைக்கவல்லா ருளராயின்
உரையாத வனப்புடைய வுத்தமியே! நீயன்றோ?

37. எக்காலு முனைமறவா விருதயமொன் றுளதாயின்
எக்காலுஞ் சிந்திக்கு மென்மனமென் றறியாயோ?

38. மாசற்ற நின்முகத்தை மதியொத்த தென்றிடிலோ
ஆசற்ற குறைதவில்லா வம்முகத்துக் கழகாமோ?

39. தீதற்ற நின்முகத்தைத் தாமரையென்றோதிடிலோ
போதென்று குவியாவுன் பொன்முகத்துக் கழகாமோ?

40. கார்போலு நின்கூந்தல் கருமேகமென்றிடிலோ
நீர்தோயா மணங்கமழு நின்கூந்தற் கழகாமோ?

41. வரிநிறைந்த நின்கண்கள் வனப்புடைய கயலென்றால்
பரிவுற்றவற்றிற்குப் பழுதொன்றும் வாராதோ?

42. செவ்வாயைக் குமுதமெனச் செப்பிடுவ துண்டானால்
அவ்வாயைப்போலதற்க தாமின்மை யறியாரோ?

43. கண்ணாடி யெனக்கவிகள் கன்னத்தைச் செப்பிடிலோ
கண்ணாடி பார்த்தார்க்குக் களிப்பூட்டா தறியாரோ?

44. சிவனறிய வரியயனுஞ் சென்றதுபோ லுனைக்காண
இவணவனுஞ் சென்றலையு மென்மனத்தை யறியாயோ?

45. பெருநிதிகள் யானுலகிற் பெற்றிடுவ துண்டானல்
திருவொத்த நீலாவே! தேன்மொழியே! நீயன்றோ?

46. முற்றவத்தால் யான்பெற்ற முழுப்பொருளொன் றுண்டானல்
சொற்றவறு வன்புடைய சண்பகமே! நீயன்றோ?

47. நற்றவத்தால் யான்பெற்ற நற்பொருளொன் றுண்டானல்
கற்றறிந்த நீலாவே! காதலியே! நீயன்றோ?

48. வாழ்வதனல் யானடைய வரும்பொருளொன் றுண்டாயின்
யாழ்போலு நீயன்றோ? இன்மொழியே! நீலாவே!

49. உய்வதனல் யானடையு முயர்பொருளொன் றுண்டாயின்
மெய்யன்பே! நீயன்றோ? மாண்புடைய நீலாவே!

50. மடியாமல் யானிருக்க மருந்தொன் றுளதானல்
பிடியொத்த நீயன்றோ? பெண்மணியே! நீலாவே!

51. இறவாமல் யானிருக்க இச்சிப்ப துண்டானல்
குறையாத வனப்புடைய காதலியே! உனக்கன்றோ?

52. எப்போது நின்னுருவே யென்னெதிரி லுளதானல்
எப்போது முனைமறவே னென்றியம்பல் வியப்பாமோ?

53. எக்காலு நின்பெயரே யென்னுவி லுளதானல்
எக்காலு நினைமறவே னென்றியம்பல் பொய்யாமோ?

54. எந்நேர நின்னுருவே என்மனத்தி லுளதானல்
பொன்னேபோல் நீலாவே! பொய்யாமோ வென்காதல்?

55. என்னுடலி லுயிரென்ப தேதேனு முளதானல்
பொன்னிறந்தோய் நீயன்றோ? பொற்புடைய நீலாவே!

026:41
N4
175434

56. கண்ணுடையே னென்றிருந்தேன் காதலியே! நீலாவே!
கண்ணொளியே நீசென்றாற் கண்ணென்ப துண்டாமோ?

57. உயிருடையே னென்றிருந்தே னுயர்குலத்து நீலாவே!
உயிருருவே! நீசென்றா லுயிரென்ப துண்டாமோ?

58. மனமுடையே னென்றிருந்தேன் மாண்புடைய நீலாவே!
மனவுருவே! நீசென்றால் மனமென்ப துண்டாமோ?

59. அறிவுடையே னென்றிருந்தே னமுதே! நீலாவே!
அறிவுருவே! நீசென்றா லறிவென்ப துண்டாமோ?

60. படிப்புடையே னென்றிருந்தேன் பொற்புடைய நீலாவே!
படிப்புருவே! நீசென்றால் படிப்பென்ப துண்டாமோ?

61. கற்றறிந்தே னென்றிருந்தேன் காதலியே! நீலாவே!
கற்றறிந்த நீசென்றாற் கல்வியென்ப துண்டாமோ?

62. பொன்னுடையே னென்றிருந்தேன் பொற்கொடியே! நீலாவே!
பொன்னுருவே! நீசென்றாற் பொன்னென்ப துண்டாமோ?

63. புகழுடையே னென்றிருந்தேன் பூங்குழலாய்! நீலாவே!
புகழுருவே! நீயிறந்தால புகழெனப துண்டாமோ?

64. சுகமுடையே னென்றிருந்தேன் சொற்பவள நீலாவே!
சுகவுருவே! நீசென்றாற சுகமென்ப துண்டாமோ?

65. குயிலைப்போல் நீயுலவுங் கூரையையான் கண்ணுற்று
குயிலைநான் காணாது கலக்கமுற்று வாடுவனே!

66. அன்னம்போல் நீயுலவு மாரகத்தைக் கண்ணுற்று
அன்னத்தைக் காணா தாற்றிமனம் வாடுவனே!

67. பிடியைப்போல் நீயுலவும் பொற்பகத்தைக் கண்ணுற்று
பிடியையான்காணுது புலம்பிமனம் வாடுவனே!

68. மானைப்போல் நீயுலவு மாடியையான் கண்ணுற்று
மானையான்காணுது மனங்கலங்கிவாடுவனே!

69. கிளியைப்போல் நீயுலவுங் கவினகத்தைக் கண்ணுற்று
கிளியையான்காணுது கண்ணீரைச்சிந்துவனே!

70. முழுமதிபோல் நீயுலவு மாளிகையைக் கண்ணுற்று
முழுமதியைக் காணுது மனம்வருந்தி நிற்பேனே!

71. இளமதிபோல் நீயுலவு மில்லகத்தைக் கண்ணுற்று
இளமதியைக் காணு தேக்கமுற்று நிற்பேனே!

72. புதுமதிபோல் நீயுலவும் பொற்பகத்தைக் கண்ணுற்று
புதுமதியைக் காணுது புலம்பிமனம் வாடுவனே!

73. சந்திரன்போல் நீயுலவுஞ் சிகரமதைக் கண்ணுற்று
சந்திரனைக் காணுது சித்தநொந்து வாடுவனே!

74. எக்காலு மெனைக்கண் டெனைக்களிக்கச் செய்திட்ட
எக்காலு மறவாமல் யானேத்து நீலாவே!

75. வாடாத நின்முகமே யுணவென் றுட்கொண்டு
வாடாது நானிருக்க வாண்முகத்தைக் காட்டாயோ?

76. முகமலரா லெனைவளர்க்கு மதுமொழியே! நீலாவே!
முகமலரைக் காட்டாது மனத்துயரத்தந்தாயோ?

77. நோக்கத்தா லெனைவளர்க்கு நீளணங்கே! நீலாவே!
நோக்கா தெந்தனைநீ நோவவைத்த லழகேயோ?

175434

78. வருந்தாது நானிருந்து வாழ்ந்திருக்க நீயெண்ணில்
மருந்தொக்கு நின்னன்பை மாதரசே! தாராயோ?

79. மடியாதுயானிருக்க மலர்முகக்த்தைச் சற்றேனும்
பிடியொத்த நீலாவே! பெண்ணரசே! காட்டாயோ?

80. வருந்தாது நா்னிருக்க வாண்முகத்தைச் சற்றேனும்
திருப்போலு நீலாவே! தரிசிக்கக் காட்டாயோ?

81. அரற்றுது நானிருக்க வம்முகத்தைச் சற்றேனும்
மறவாது காட்டாயோ மணங்கமழு நீலாவே!

82. புலம்பாது நானிருக்கப் பூமுகத்தைச் சற்றேனும்
குலமுற்ற நீலாவே! காட்டாயோ நான்காண?

83. நோவாது நானிருக்க நின்முகத்தைச் சற்றேனும்
போகாத மெய்யன்பே! பொலிவுடனே காட்டாயோ?

84. என்மனத்தை நின்மனத்தாலிரு பிளவாய்ப் பிளந்திட்ட
பொன்போலு நீலாவே! பொன்முகத்தைக் காட்டாயோ?

85. மனமதனிற் பதிந்திருக்கு மாண்புடைய நீலாவே!
மனத்துயரந் தீரவுந்தன் மலர்முகத்தைக் காட்டாயோ?

86. இருள்போலு மென்றுயரா மின்றேடு நீக்கமுற
அருள்செய்ய நீநினைத்தா லாகாதோ நீலாவே?

87. நோய்போலு மென்றுயரா நொடிப்போதில் நீக்கமுற
சேய்போலு நீலாவே! திருமுகத்தைக் காட்டாயோ?

88. உயிருவே! நீலாவே! ஊர்வசியும் போல்வாளே!
உயிரற்ற காதலனை உயிருடைய னுக்காயோ?

88. திருவினுருவே! தேன் மொழியே! நீலாவே!
திருவற்ற காதலனைத் திருவுடைய னுக்காயோ?

90. இத்தனைநா ளென்மனத்தி லிடைவிடா திருந்திட்டு
பத்தனென னுமென்னன்பைப் பழித்திடுத லெவ்வாறோ?

91. இக்காலு மென்னுளத்தி லிசைவுடனே வீற்றிருந்து
எக்காலு மறவாத வென்மனத்தைப் பழிப்பாயோ?

92. இவ்வாறுமனம் வருந்தவெனைச் செய்வா யென்றறிந்தால்
பவ்வமதி முகமதனைப் பாராம லிருப்பேனே!

93. அறியாமல் நின்முகத்தை யண்ணாந்து பார்த்ததனல்
வெறிகொண்டு காதலினல் வருந்திடவுஞ் செய்தாயோ?

94. தெரியாது நின்முகத்தை தரிசித்த காரணத்தால்
அறியாத வென்மனத்தை யரற்றிடவுஞ் செய்தாயோ?

95. தாமரைபோல் நின்முகத்தைத் திரும்பியான் பார்த்ததனல்
சாமமு நீர்சொரிந்து சிந்திக்கச் செய்தாயோ?

96. காதலுள்ள காதலனைக் கலங்கவிட்டுச் சென்றிடுதல்
கோதையுனக் கழகன்றே காதலி! நீயறியாயோ?

97. காதலனை மறந்திட்டுக் கண்கலங்கச் சென்றிடுதல்
மாதருக் கழகன்றே மாமயிலே! அறியாயோ?

98. நண்பனை நீமறந்திட்டு நாட்டைவிட் டகன்றிடுதல்
நண்பனுக்குத் தீதென்று நாயகி நீயறியாயோ?

89. பத்தனை நீமறந்திட்டுப் பழிகொண்டு சென்றிடுதல்
உத்தமியே வழகென்று உரைப்பாரு முள்ளாரோ?

100. அடிமையை நீழறந்திட்ட கன்றிடுத லழகென்று
துடியிடையே யெவர்சொல்வர் தொல்லுலகில் நீலாவே?

101. பிரிந்திடுவா யென்றெண்ணிப் பெருமழைபோல் நீர்சொரியும்
வரிநிறைந்த வென்கண்கள் வற்றிடுவ தெக்காலம்?

102. கூடியபின் பிரியாது குவலயத்தில் வாழ்ந்திடுதல்
தேடியவென் நீலாவே! திண்மையென் பதறியாயோ?

103. சேர்ந்ததன் பின்பிரியாது சகமதனில் வாழ்ந்திடுதல்
சோர்விலா நட்பென்று சொல்லிடுவ தறியாயோ?

104. இணைந்தபின் பிரியாதிவ் வுலகில் வாழ்ந்திடுதல்
அணைந்திட்ட காதலருக் கழகென் றறியாயோ?

105. பழகியபின் மறந்திட்டுப் பலநாள்கள் பிரிந்துறைதல்
அழகென்று நினைத்தனையோ வாருபிரே! நீலாவே!

106. பணமற்ற வென்தனைநீ பாவியெனக் கைவிடுதல்
குணமுற்ற வுனக்கழகோ கோகிலமே! நீலாவே!

107. பொருளற்ற வென்தனைநீ பிரிந்திட்டுச் சென்றிடுதல்
திருப்போலு முனக்கழகோ தேவதையே! நீலாவே!

108. மறவாது சற்றென்னை மனமதனில் வைத்திருப்பின்
மறவாதுந்தனையான் மணந்திடுவேன் நீலாவே!

109. நீங்காது சற்றென்னை நினைவதனில் வைத்திருப்பின்
வாங்காது ந்தனையான் வந்தடைவேன் நீலாவே!

110. மாறாது சற்றென்னை மனமதனில் வைத்திருப்பின்
கூறாது வந்துன்னைக் கொண்டிடுவேன் நீலாவே!

111. இழவாது சற்றென்னை யிருதயத்தில் வைத்திருப்பின்
வழுவாதுந் தனையான் வந்தடைவேன் நீலாவே!

112. எப்போது மேல்நின் றெனைக்காணப் பார்த்திருப்பாய்
இப்போதெவ்வா றெனைமறந்து சென்றனையோ?

113. தப்பாமல் நான் தினமுந் தரிசித்துமனமகிழ
எப்போது மேல்நின் றிப்போது மறைந்தனையோ?

114. மாடியையா னிதுவரையில் மனமகிழ நோக்கிவர
மாடியையே கண்ணுற்று மனங்கலங்கச் செய்தாயோ?

115. இவ்வாறெனைப்பிரிந் திரக்கமற்றிருப்பதற்கு
எவ்வாறு கற்றனையோ வேதமிலா நீலாவே?

116. மயில்போலுநீயுலவும் மாளிகைமே லிப்போது
மயில்போலுமிலலாத மாதர்வந்துலவுவதே!

117. குயில்போலு நீயுலவுங் கவினகத்திலிப்போது
குயில்போலுமில்லாத கோதையருலவுவதே!

118. மான்போலுநீயுலவு மாளிகைமேலிப்போது
மானைப்போலில்லாத மாதர்வந்து நிற்பதுவே!

119. தினந்தினமு மெனக்கெழுதித் தவறாது முகங்காட்டி
மனந்தனைநீ மகிழ்வித்து மறைந்திடுவ தழகேயோ?

120. தனித்தனியே சிந்தித்துத் தயங்கிடுதல் தீதென்று
நினைத்தென்னைவாறாயோ நொடிப்போதில் நீலாவே?

121. நினைந்தபோதெல்லா நீள்கவிகளுண்டானால்
உனையடைந்தா லுரைப்பதென்னோ யான்?

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
120434

Printed at the
Visvakulotharana Press,
Chintadripet,
Madras.

புத்தகம் கிடைக்குமிடங்கள்.

விஸ்வகுலோத்தாரண பிரஸ்,
5/10, வேதகிரிமேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

கணேஸ் அண்டு கோ.,
தம்புசெட்டி வீதி,
G. T. மதராஸ்.

நவீனகதா புத்தகசாலை.
8, சூளை ஹைரோட்,
வேபேரி போஸ்ட், மதராஸ்.

Naveena katha Book Depot,
111, Montgomery St.,
Ra ngoon.